

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | டிசம்பர் 24, 2020 | புரட்சி 19 | முழக்கம் 22 | விலை: ரூ.3.00

# கலை நிகழ்ச்சிகள் வழியாகப் பகுத்தறிவுப் பரப்பிய பெரியார் கொள்கைத் 'தூதர்கள்'

***சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் கூட்டத்தில், முடிவெய்திய முரசொலி முகிலன் படத்தைத் திறந்து வைத்து விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய சுருக்கமான உரையின் விரிவாக்கம்.***

சமுதாய மாற்றத்துக்காக பெரியார் முன் வைத்த ஜாதி எதிர்ப்பு - பகுத்தறிவு - மூட நம்பிக்கை எதிர்ப்பு-சமூக நீதி-இந்தி எதிர்ப்பு-வடநாட்டு எதிர்ப்புக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சென்ற கொள்கைத் தூதுவர்களாக பல தோழர்கள் தங்களை அர்ப்பணித்து செயல்பட்டிருக் கிறார்கள். இங்கே நாம் திறந்து வைத்திருக்கிற முரசொலி முகிலன் அதில் ஒருவர். அவர் தி.மு.க.வைச் சார்ந்தவர். ஆனால் பகுத்தறிவு கொள்கைகளை கலை நிகழ்ச்சிகள் வழியாக மக்களிடம் கொண்டு சென்றவர். தி.மு.க. என்றாலும் அவர் அதிகம் நிகழ்ச்சிகளை நடத்தியது பெரியார் இயக்கம் அமைத்துத் தந்த மேடைகளில்தான். பெரியார் திராவிடர் கழகமாக நாம் செயல்பட்டபோது பல தொடர் கூட்டங்களில் அவர் பங்கேற்று கலை நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார். இராயப்பேட்டைப் பகுதியில் பெரியார் திராவிடர் கழகத்துக்கு ஒரு தலைமை அலுவலகத்தை நாம் குத்தகைக்கு (Lease) எடுத்தபோது அதற்கு நிதி திரட்டும் நிகழ்ச்சிகளுக்கு அவரது கலை நிகழ்ச்சியையே நாம் பயன்படுத்தினோம்.

மேடையில் அவருக்கும் பக்தி மூடநம்பிக்கையில் ஊறிப்போன ஒரு தோழருக்கும் இடையிலான வாதங்கள். எதிர்வாதங்களாக நிகழ்ச்சிகளை நடத்துவார். பெரியாரைப் போலவே பெரியார் பயன்படுத்திய அதே சொற்றொடர்களைக் கொண்டு பேசும்போது கூட்டத் தினரிடையே கருத்துகள் ஆழமாகப் போய்ச் சேரும். ஆசிரியராகப் பணியாற்றிய அவர் 1976 அவசரநிலை காலத்தில் கட்டாயப் பணி நீக்கம் செய்யப்பட்டவர் என்ற தகவல்களும் முகநூல்களில் பதிவாகியுள்ளன. நிகழ்ச்சியை இறுதி செய்யும்போது அவர் 'ஒப்பாரி' என்ற மரணத்துக்கு அழும் பாடலை 30 நிமிடம் வரை பாடுவார். அந்தக் காலத்தில் மன்னார்குடியில் உள்ள இராஜகோபாலசாமி கோயிலுக்குள் கர்ப்பகிரகத்துக்குள் அர்ச்சகரை கொலை செய்துவிட்டு சாமி சிலையைத் திருடிய ஒரு சம்பவம் நடந்தது. பரபரப்பாக பேசப்பட்ட நிகழ்வு இது. குற்றவாளிகள் பிடிபட்டு தண்டிக்கப்பட்டனர். அந்த நிகழ்வை முன் வைத்து அர்ச்சகரின் மனைவி ஒவ்வொரு நாளும் கடவுளுக்கு சேவகம் செய்த தனது கணவரை கடவுள் காப்பாற்றாமல் போனது ஏன் என்று அழுது புலம்பி ஒப்பாரி வைப்பது போல பாடுவார். பார்வையாளர்களை உணர்வு ரீதியாகக் கட்டிப் போட்டு பகுத்தறிவு சிந்தனைகளைத் தூண்டுவதாக அந்த நிகழ்ச்சி இருக்கும்.

தி.மு.க.வுக்கும் பெரியார் இயக்கங்களுக்கு மிடையே முரண்பாடுகள் உருவான காலத்திலும் அவர் பெரியார் மேடையில் நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார். ஆனால் கலைஞரை விமர்சிக்காமல் அவரது சமுதாய மாற்றத் துக்கான சாதனைகளை தேர்வு செய்து பட்டியல் போட்டுக் காட்டுவார். கடந்த 2020 டிசம்பர் 14ஆம் தேதி திருவாரூர் அருகே உள்ள சொந்த கிராமமான அத்திப் புலியூரில் 81ஆவது வயதில் அவர் முடிவெய்தி விட்டார். நாம் அவரது பகுத்தறிவுப் பணிகளை நன்றியுடன் நினைவு கூர்கிறோம். அவருக்கு இரங்கல் தெரிவித்து தி.மு.க.வில் ஒருவரிடமிருந்து ஒரு 'டிவிட்டர் பதிவு' வெளி வந்திருக்கிறது. தி.மு.க. கரை போட்ட வேட்டி, கருப்புச் சட்டையுடன் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளை கலை நிகழ்ச்சியாக 'ஈரோட்டு பூகம்பம்' என்ற தலைப்பில் மக்களிடையே பரப்பியவர் என்று புகழ் மாலை சூட்டி இரங்கல் தெரிவித்திருக்கும் அந்த தி.மு.க. தோழர், கட்சி யின் இளைஞரணி தலைவரான மு.க. உதயநிதி ஸ்டாலின்.

கலை நிகழ்ச்சி என்ற பரப்புரை வடிவத்தை அறிமுகப் படுத்தியது பெரியார் இயக்கம் தான். பேச்சாளர்கள் இரவு 10 மணி வரை பேசுவார்கள்; அதற்குப் பிறகு கலை நிகழ்ச்சிகள் தொடங்கி நள்ளிரவு வரை நடக்கும்; மக்கள் கூட்டம் பெருமளவில்கூடும். ஆர்மோனியம், தபேலா, டோலக் போன்ற இசைக் கருவிகளோடு வளமான குரலில் எழுச்சியை உருவாக்கும் பாடல்கள்; பிறகு பேச்சு; தலைவர்களின் குரலிலேயே பேசுவது; இடையிடையே மக்களை சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கும் பகுத்தறிவு நகைச்சுவை என்று நிகழ்ச்சிகள் 'கலை' கட்டும்.



அந்தக் கலைஞர்களைப் பற்றிய முறையான பதிவுகள் இல்லை என்பது உண்மையிலேயே கவலைக்குரியது. அதேபோல் தங்களது அறிவார்ந்த கூர்மையான வாதங் களால் மேடைகளின் முழங்கி மக்களை சிந்திக்க வைத்த பேச்சாளர்கள் எத்தனையே பேர் இந்த இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்ப தங்கள் பங்களிப்புகளை வழங்கியுள்ளனர்.

**என்.ஜி. ராஜன்:** குடந்தை என்.ஜி. ராஜன், ஒரு கலை நிகழ்ச்சிக் குழுவை நடத்தினார். 1960களில் வந்த குழு மிகப் பிரபலம். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் ஒவ்வொரு நாளும் ஏதேதனும் ஒரு கிராமத்தில் என்.ஜி. ராஜன் குழுவின் பகுத்தறிவு கலைநிகழ்ச்சி நடந்து கொண் டிருக்கும். மாணவப் பருவத்திலேயே அந்த நிகழ்ச்சிகள் பலவற்றை நான் கேட்டிருக்கிறேன். நகைச்சுவையாக மின்னல் வேகத்தில் சரவெடியாகப் பேசுவார். தனக்கு முன்னால் பல்வேறு தாளக் கருவிகளை வைத்து இசைப்பார். ஆர்மோனியம், தபேலா வாத்தியக் காரர்கள் பாடகர் என்ற அளவில் அவரது குழு இருக்கும். காமராசர் ஆட்சியை பெரியார் இயக்கம் தீவிரமாக ஆதரித்த காலகட்டம் அது. காமராசர் புகழையும் அவரது சமூகநீதி சாதனைகளையும் பேசுவார்; பாடுவார். பெரியாரின் பகுத்தறிவு - ஜாதி ஒழிப்பு கருத்துகளை உணர்வு களோடு மக்களிடம் கொண்டு சேர்ப்பார்.

பெரியார் இயக்கத்தின் ஆற்றல் மிகு பேச்சாளர் திருவாரூர் தங்கராசு எழுதியதுதான், நடிகவேள் எம்.ஆர். ராதா நடத்திய 'இராமாயணம்' நாடகம். பிறகு, திருவாரூர் தங்கராசு அவர்களே இந்த நாடகத்தை நடத்தினார். அவரே இராவணன் வேடமிட்டு நடித்தார். மயிலாடு துறையில் 1970ஆம் ஆண்டு நடந்த திராவிடர் கழக மாநாட்டில் இந்த நாடகம் நடந்தது. திராவிடர் கழகத்தின் மற்றொரு களப் பணியாளரும் பேச்சாளருமான திருச்சி வீ.அ. பழனி, இந்த நாடகத்தில் இராமன் வேடமிட்டு நடித்தார். அந்த நாடகத்துக்கு பின்னணி இசை வழங்கியது என்.ஜி.ராஜன் குழு. மயிலாடுதுறையில் நடந்த நாடகத்தை மாநாட்டில் பங்கேற்ற பெரியார் நள்ளிரவு வரை அமர்ந்து பார்த்து நாடக இறுதியில் மிகச் சிறந்த உரையாற்றினார்.

திருவாரூர் தங்கராசு அவர்களின் இயக்கப் பணி குறித்தும் நாடகக் கலை மற்றும் இராமாயணம் குறித்தும் பெரியார் ஆற்றிய உரை பதிவில்லாமலே போய்விட்டது என்பதை திருவாரூர் தங்கராசு அவர்கள், பிறகு நேரில் சந்தித்த போதெல்லாம் மிகவும் வருத்தத்துடன் பகிர்ந்து கொண்டார். 'இராமாயண உபன்யாசம்' என்று பார்ப்பனர்கள் நடத்தி வந்த 'கதாகாலட்சேப' முறையைப் பயன்படுத்தி இராமாயணத்தின் பார்ப்பனியத்தை தோலுரிக்கும் தொடர் சொற்பொழிவுகளை கும்பகோணம் நகரில் திருவாரூர் தங்கராசு நடத்தினார். குடந்தை மாநகர திராவிடர் கழகம் இதற்கான ஏற்பாடுகளை செய்தது. அதில் என்.ஜி.ராஜன் கலைக் குழுவினரே பின்னணி இசை வழங்கினார். தங்கராசு சாஸ்திரிகள் , கோவிந்தராஜ பாகவதர் (என்.ஜி. ராஜன் முழுப் பெயர் கோவிந்த ராஜன்) இணைந்து வழங்கும் இராமாயண கதாகாலட்சேபம் என்று அந்த நிகழ்ச்சி விளம்பரப்படுத்தப்பட்டது. மக்கள் பெருமளவில் ஒவ்வொரு நாளும் திரண்டார்கள்.

தையல் கடை நடத்தி, பிறகு சிறு வணிகம் செய்து கழகத்துக்கு வந்தவர் என்.ஜி. ராஜன் என்றும், முதலில் 'குறவன்-குறத்தி' என்ற பழங்குடி மக்களின் பாடல் வழியாக இரண்டு பெண்களை நடனமாட வைத்து கலை நிகழ்ச்சிகளை நடத்தியவர் என்றும் நமது பெரியார் குடும்பத்தின் மூத்த சகோதரர் திருச்சி செல்வேந்திரன்,

(4ஆம் பக்கம்)

## வினா விடை

- உ.பி.யில் கழுதை சாணத்தில் உணவு மசாலா தயாரித்த 'இந்து' அமைப்பின் தலைவர் கைது.
  **– செய்தி**

  பசு சாணம் பற்றாக் குறையாக இருக்கும் போது அவர் என்ன தான் செய்ய முடியும்?

- அ.தி.மு.க. பா.ஜக. கூட்டணி யார் தலை மையில் தேர்தலை சந்திக்கும் என்பதை எங்கள் கட்சியே முடிவு செய்யும்.
  **– பா.ஜ.க. முருகன்**

  சட்டசபையில் மருந்துக்குக்கூட ஒரு ஆள் இல்லாத கட்சி யின் பேச்சைப் பார்த் தீங்களா? காலமடா, சாமி!

- 'கொரானா' காலம் என்பதால் பக்தர் களுக்கு சொர்க்க வாசல் நுழைய அனுமதி இல்லை.
  **– கோயில் நிர்வாகங்கள் அறிவிப்பு**

  'கொரானா' வழியாக சொர்க்கத்துக்கு போனாகூட தடுப் பீங்களா?

- நான் அமைக்கப் போவது எம்.ஜி.ஆர். ஆட்சியின் நீட்சி.
  **– கமலஹாசன்**

  ரொம்ப நன்றி சார். இப்பத்தான் முதன் முதலாக நீங்க பேசு றதே, புரிஞ்சிருக்கு!

- என்னுடைய கைலாசா தீவுக்கு ஆஸ்திரேலியாவி லிருந்து இலவசமா விமானத்தில் வரலாம்!
  **– நித்யானந்தா**

  சி.பி.அய்., அமுலாக்கத் துறையினர், கிரைம் பிராஞ்ச் போலீஸ் எல்லாம் இலவசமாக வரலாமா, சுவாமி!

- 970 கோடியில் புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்டுகிறது மோடி ஆட்சி.
  **– செய்தி**

  எதுக்கு வீண் செலவு? இராமன் கோயில் மண்டபத்திலேயே நாடாளுமன்றத்தை வச்சுக்கலாமே!

தலையங்கம்

## அய்.அய்.டி.களில் இடஒதுக்கீடு ஒழிகிறது?

மருத்துவக் கல்லூரிகளில் அகில இந்திய கோட்டாக்களில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை நடப்பாண்டில் திட்டமிட்டு முடக்கிய பா.ஜ.க. ஆட்சி, அடுத்து அய்.அய்.டி. உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீட்டைக் கைகழுவ ஆலோசிக்கிறது. வேடிக்கை என்னவென்றால், இந்த நிறுவனங்களில் பேராசிரியர் நியமனங்களில் இடஒதுக்கீடுகள் முழுமையாகவே நிரப்பப்படாத நிலையில், எப்படி தீவிரமாக இந்த இடஒதுக்கீட்டை அமுல்படுத்தலாம் என்பதற்காக மத்திய கல்வி அமைச்சகம் நியமித்த குழுவே இப்படி ஒரு விபரீத பரிந்துரையை அரசிடம் முன் வைத்திருப்பதுதான். இந்தக் குழுவின் தலைவர் டெல்லி அய்.அய்.டி. இயக்குநர் வி. இராம்கோபால் சர்மா. கான்பூர் அய்.அய்.டி. இயக்குநர், மும்பை மற்றும் சென்னை அய்.அய்.டி. பதிவாளர்கள் மற்றும் சமூகநலத் துறை, பழங்குடி மக்கள் நல்வாழ்வுத் துறை, வேலை வாய்ப்புத் துறை, மாற்றுத் திறனாளி நலத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஆகியோர் குழுவின் உறுப்பினர்கள். ஆசிரியர் நியமனங்களில் மட்டுமல்ல, மாணவர் சேர்க்கையிலும் இடஒதுக்கீட்டுக் கொள்கையை தீவிரமாக அமுல்படுத்துவது குறித்து ஆராய வேண்டும் என்பதே அரசு நிர்ணயித்த வரம்பு.

தீவிரமாக இடஒதுக்கீட்டைப் பின்பற்றும் வழி இடஒதுக்கீட்டையே முழுமையாக ஒழித்து விடுவதுதான் என்ற விபரீத முடிவுக்கு வந்துள்ளது இந்தக் குழு. அது மட்டுமல்ல; மத்திய கல்வி அமைச்சகமே இதை ஏற்றுக் கொண்டு பரிசீலித்து வருகிறது என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறது. இந்தப் பரிந்துரைக்கு குழுவினர் வைக்கும் காரணம் என்ன? அய்.அய்.டி. நிறுவனங்களில் கல்வி உயர்தரத்தை (Academic Excellence)க் காப்பாற்ற வேண்டும் என்பது ஒரு காரணம். அந்தத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் இடஒதுக்கீட்டின் கீழ் கிடைப்பதில்லை என்பது மற்றொரு காரணம். எனவே இடஒதுக்கீடுகள் தேவையில்லை என்று வரையறுக்கப்பட்ட ஹோமி பாபா தேசிய நிறுவனம், டாடா அடிப்படை ஆய்வு மய்யம், விண்வெளி ஆய்வு மய்யம் போன்ற எட்டு உயர் கல்வி நிறுவனங்களோடு அய்.அய்.டி.களையும் சேர்த்துவிட வேண்டும் என்கிறது இந்தக் குழு.

ஒன்றிய ஆட்சியும் அதன் அமைச்சக அதிகாரிகளும் அய்.அய்.டி. இயக்குநர்கள் மற்றும் பதிவாளர்களும் இடஒதுக்கீடு எனும் சமூக நீதிக் கொள்கை மீது கடும் வெறுப்புக் கொண்ட பார்ப்பனிய மன நிலையிலேயே இருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட சான்று தேவையில்லை.

மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு வழங்கலாம் என்று சட்டம் வந்ததே 2006ஆம் ஆண்டில்தான் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 27 சதவீத ஒதுக்கீடு வழங்கினால் திறந்த போட்டிக்கான இடங்கள் பாதிக்கப்படாத அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும் என்று பார்ப்பனர்கள் வைத்த கோரிக்கையை அன்றைய காங்கிரஸ் ஆட்சி ஏற்று, அந்த அடிப்படையில் அய்.அய்.டி. மாணவர் சேர்க்கை 50 சதவீதம் உயர்த்தப்பட்டது. 2008-17 ஆண்டுகளுக்கிடையில் கூடுதல் அய்.அய்.டி.களும் திறக்கப்பட்டன. இப்போது மாணவர்கள் சேர்க்கை அதிகரித்ததால் அதற்கு ஏற்ற விகிதத்தில் உரிய தகுதியுடைய ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்று கூறி இடஒதுக்கீட்டையே இரத்து செய்து விடலாம் என்கிறார்கள். மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தவர்களே பார்ப்பன மனுவாதிகள்தான்! அதைக் காரணம் காட்டி இடஒதுக்கீட்டை ஒழிக்க வேண்டும் என்று பரிந்துரைப்பதும் அவர்கள் தான்.

கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அய்.அய்.டி. மற்றும் அய்.அய்.எம். உயர் கல்வி நிறுவனங்களில் உயர் பதவி உள்ளிட்ட அனைத்து பேராசிரியர் நியமனங்களிலும் இடஒதுக்கீட்டை உறுதி செய்ய வேண்டும் என்று தாக்கீது பிறப்பித்தது மத்திய கல்வி அமைச்சகம் தான். இப்போது ஓராண்டிலேயே தனது கொள்கையை மாற்றிக் கொண்டு இடஒதுக்கீட்டையே நீக்கி விடலாம் என்ற முரண்பட்ட முடிவுக்கு வந்திருக்கிறது.

இடஒதுக்கீட்டை முழுவதுமாக நியமனங்களில் ஒழித்து விட்டால் தற்போதுள்ள 10 சதவீத ‘உயர்ஜாதி ஏழைகளின்’ இடஒதுக்கீட்டுக்கான தேவையே இல்லாமல் போய் விடும். ‘ஏழைகள்’ என்ற சான்றிதழும் தேவையில்லாமல் 100 சதவீதம் பார்ப்பனர்களே அனைத்துப் பதவிகளையும் கைப்பற்றி விடுவார்கள்.

இந்தியாவுக்குள் செயல்படும் அய்.அய்.டி.களுக்கான ‘தகுதி’யை சர்வதேச அளவில் பொருத்திப் பார்க்க வேண்டிய அவசியம் என்ன? காரணம் இதிலே மக்கள் வரிப் பணத்தில் படித்தவர்கள் உடனே வெளிநாட்டில் வேலை பார்க்க ஓடி விடுகிறார்கள். இதுதான் கடந்த காலங்களில் நடந்திருக்கிறது.

மற்றொன்று இடஒதுக்கீட்டுக்கான இடங்கள் அப்பிரிவு மக்களுக்கு கிடைக்க விடாத நடைமுறைகளை இவர்கள் பின்பற்றி வருவதாகும். இடஒதுக்கீட்டில் ‘தகுதி’யான விண்ணப்பதாரர்கள் கிடைக்காவிட்டால் இதர பிரிவினரிடமிருந்து இடங்களை நிரப்பிக் கொள்ளலாம் என்ற நடைமுறையைப் பின்பற்றி வருகிறார்கள்.

இரண்டாவதாக, மொத்தப் பணியிடங்களைக் கணக்கிட்டு அதன் அடிப்படையில் இடஒதுக்கீட்டுக்கான இடங்களை நிரப்பாமல், துறைவாரியாக நிறைவேற்ற வேண்டும் என்ற நடைமுறை.

மூன்றாவதாக, உலகத் தரம் வாய்ந்த 500 பல்கலைக் கழகங்களிலிருந்து ஆய்வுப் பட்டம் பெற்றவர்கள், நேரடியாக அய்.அய்.டி.களில் சேரலாம் என்ற நடைமுறை. இவர்களுக்கு 55 சதவீத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். ‘நீட்’ தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனைகள் நீக்கப்பட்டு விட்டன. எந்த எழுத்துத் தேர்வும் தேவையில்லை என்று அறிவித்து விட்டார்கள். 2018 டிசம்பரில் நாடாளுமன்றத்தில் மத்திய மனித வளத் துறை அமைச்சகம் (இப்போது கல்வி அமைச்சகமாக பெயர் மாற்றப்பட்டுள்ளது) சமர்ப்பித்த அறிக்கையின்படி மொத்தமுள்ள 23 அய்.அய்.டி.களில் பட்டியல் மற்றும் பழங்குடிப் பிரிவினர், பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் சேர்ந்து பணி நியமனங்கள் பெற்றிருப்பது 9 சதவீதம் மட்டுமே! இந்தப் பின்னணியில் சமூக நீதி ஆதரவாளர்களிடமிருந்து கேள்விகள் எழுந்தன. இதற்குக் கண்துடைப்பாக இடஒதுக்கீட்டை மேலும் தீவிரமாக அமுல்படுத்தக் குழு போடுவதாக அரசு அறிவித்தது. அந்தக் குழு தான் இப்போது இடஒதுக்கீட்டையே நீக்கி விடலாம் என்று பரிந்துரைக்க பா.ஜ.க. ஒன்றிய ஆட்சியும் அதை பரிசீலிப்பதாக அறிவித்திருக்கிறது. உதட்டளவில் இடஒதுக்கீடு ஆதரவைப் பேசிக் கொண்டு நடைமுறையில் ஒழித்துக் கட்டும் பா.ஜ.க.வின் இரட்டை வேடம் வன்மையான கண்டனத்துக்கு உரியது; போராடிப் பெற்ற உரிமைகளை இழந்து விடவே கூடாது.

# கருநாடக ‘பிராமண வாரியம்’ பாட நூல் கருத்துகளுக்கு எதிர்ப்பு

கருநாடகாவில் எடியூரப்பா தலைமையில் நடக்கும் பா.ஜ.க. ஆட்சி, ‘பிராமணர் வளர்ச்சி வாரியம்’ ஒன்றை ‘பிராமணர்களுக்காகவே’ உருவாக்கியிருக்கிறது. 6ஆம் வகுப்பு சமூக விஞ்ஞான பாடத்தில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள சில கருத்துகளை நீக்க வேண்டும் என்று வாரியத் தலைவர் எச்.எஸ். சச்சிதானந்தா மூர்த்தி என்ற பார்ப்பனர், முதலமைச்சர் எடியூரப்பாவிடம் கடந்த வாரம் ஒரு மனுவை நேரில் அளித்தார். பாட நூல் தயாரித்த வரலாற்றாளர்களைக் கலந்து ஆலோசிக்காமலேயே அந்தக் கருத்துகளை உடனே அகற்றி விடுமாறு எடியூரப்பா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். ‘புதிய மதங்களின் தோற்றம்’ என்ற தலைப்பில் வெளி வந்துள்ள பாடத்தில் கீழ்க்கண்ட கருத்துகள் இடம் பெற்றிருந்தன.

“வேத காலத்தில் (கி.மு. 1500 முதல் 600 வரை) நாட்டில் கடும் உணவு நெருக்கடி உருவானது. காரணம், ‘பிராமணர்’கள் உணவுப் பொருள்களை எரித்து யாகம் நடத்தியது தான். மட்டுமின்றி விவசாயிகளுக்கு உற்பத்திக் கருவிகளாக இருந்த ஆடு மாடுகளும் யாகத்தில் எரிக்கப்பட்டன” என்ற வரலாற்றுத் தகவல் பாடநூலில் இடம் பெற்றிருந்தது. இது வேண்டும் என்றே ‘பிராமண சமூகத்தை’ அவமதிக்கும் நோக்கத்தோடு எழுதப்பட்டது என்றும் உடனடியாக நீக்க வேண்டும் என்றும் மனுவில் பார்ப்பனர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

“சமஸ்கிருதம் புரோகிதர்களின் மொழியாகவே இருந்ததால், வெகு மக்களால் அதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில், ‘பிராமண’ ஆதிக்கத்துக்கு எதிராக புதிய மதங்கள் உருவாயின” என்ற பகுதியையும் நீக்க வேண்டும் என்பதும் பார்ப்பனர்களின் கோரிக்கை. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் இந்தப் பாடத் திட்டம் உருவாக்கப்பட்டது. அப்போது பாடத் திட்ட தயாரிப்புக் குழுவில் இடம் பெற்றிருந்த ராமச்சந்திரப்பா இது பற்றிக் கூறுகையில், “வரலாற்றுப் பேராசிரியர்களைக் கொண்டு வரலாற்று அடிப்படையில் எழுதப்பட்ட இந்தக் கருத்துகளை அவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் அரசே தன்னிச்சையாக நீக்குவது ஜனநாயகத்துக்கு எதிரானது” என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

வேதங்களில் கால்நடைகள் பலியிட்டதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. ‘யக்ஞ வேதம்’ பலியிடுதலை விரிவாகக் கூறுகிறது. குதிரையை நெருப்பில் பலியிடும் அசுவமேத யாகம்; பசுவைப் பலியிடும் கோமேத யாகம்; மனிதர்களையே நெருப்பில் போட்ட நரமேதம்; பிற உயிர்களைப் பலியிடும் ‘சர்வமேதம்’ பற்றி வேதங்கள் கூறுகின்றன. ‘அஸ்வஸ்ய சத்ர சிஷ்நந்து பத்னி க்ராக்யம் ப்ரக்ஷுதே’ என்ற சமஸ்கிருத சுலோகம், குதிரைகள் நெருப்பிலிடப்பட்ட அசுவமேத யாகத்தை உறுதிப்படுத்து வதாகும். பாட நூல்களில் வேதங்களின் அடிப்படையில் கூறப்பட்ட கருத்துகளை தடை செய்யக் கோரும் பார்ப்பனர்கள், அந்த வேதங்களையே தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைப்பதே நியாயம். ஆனால் பார்ப்பனியம் அதைச் செய்யாது. வேதங்களும் புனிதமாக மதிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் அதன் மோசமான மனித விரோத கருத்துகள் மக்களுக்கு தெரிந்து விடக் கூடாது என இரட்டை வேடம் போடுகிறது. - இதுதான் பார்ப்பனியம்.

## கடவுள் சொத்தை மக்களுக்குப் பயன்படுத்தக் கூடாதா?

‘கோயில் நிதி கோயிலுக்கு; மக்களுக்கு அல்ல’ - இப்படி ஒரு புதிய முழக்கம் கேட்கிறது. மக்களுக்கு நெருக்கடி வரும்போது கோயில் நிதியைப் பயன்படுத்துவதை ‘தெய்வக் குற்றம்’; அப்படி மக்களுக்குக் கொடுப்பவர்கள் இந்து விரோதிகள் என்கிறார்கள், பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்து அமைப்புகளை நடத்தும் கூட்டத்தினர்.

கொரானா காலத்தில் அன்றாட வாழ்க்கைக்கே திணறிக் கொண்டிருந்தனர் மக்கள். அவர்களுக்கு உதவிட குருவாயூர் கிருஷ்ணன் கோயில் நிதி ரூ.10 கோடியை கேரள அரசு எடுத்து செலவிட்டது. அதைத் திருப்பித் தர வேண்டும் என்று இப்போது கேரள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, கொரானா காலத்தில் மக்களுக்கு உதவிட ரூ.50 கோடி கோயில் நிதியை எடுக்கத் திட்டமிட்டது. ‘கூடாது; வழக்கு தொடர்வோம்’ என்று மிரட்டியது இந்து முன்னணி. உடனே ‘கோயில் நிதியை எடுக்க மாட்டோம்’ என்று சரணடைந்து விட்டார் எடப்பாடி!

கோயில் நிதியை கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு கோயிலில் வசதிகளை செய்து தரவே செலவிட வேண்டும் என்கிறது, கேரள உயர்நீதிமன்றம். ‘குருவாயூர் கிருஷ்ணன்’ தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு மட்டும்தான் உரியவர் என்பது, ‘கிருஷ்ணனுக்கே’ அவமானம் இல்லையா?

இந்து காவலர்கள் கோயிலின் அசையும் அசையா சொத்துகள் அனைத்தும் குருவாயூரப்பனுக்கே சொந்தம் என்கிறது, உயர்நீதிமன்றம்.


குருவாயூரப்பன், சொத்துகளை வாங்கச் சொன்னானா? அதைத் தனக்கு எழுதித் தர வேண்டுமென கேட்டானா? உலகத்தையே படைத்ததாகக் கூறப்படும் கடவுளுக்கு நிலங்களும் கடைகளும் நகைகளும் சொத்துகளாக இருக்க வேண்டுமா? இந்த சொத்துகளை யாருக்கு எப்படி செலவிடவேண்டும் என்று கிருஷ்ணன் உயில் எழுதி அது பத்திரப் பதிவு அலுவலகத்தில் பதிவாகியிருக்கிறதா? நீதிபதிகள் என்ற இருக்கையில் அமர்ந்து விட்டால் அவர்களே கடவுள்களாக மாறி உத்தரவுகளைப் பிறப்பிக்கலாமா? இப்படி கேட்டால் கடவுள் விரோதி; இந்து விரோதி என்று கூவத் தொடங்கி விடுவார்கள்.

கோயில்களை பார்ப்பனர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் கோயில் சொத்துகளை வெகுமக்களுக்குப் பயன்பட்டுவிடக் கூடாது என்பதில் குறியாக இருக்கிறார்கள்.

‘கொரானா’ எனும் கொடிய நோய்த் தொற்றை குருவாயூர் கிருஷ்ணன் உள்பட எந்தக் கடவுளும் தடுக்காதது ஏன்? பக்தர்களைக் காப்பாற்ற முன் வராதது ஏன்? எவ்வளவோ பக்தர்கள் தங்களை நோய்களிலிருந்தும் குடும்பப் பிரச்சினையிலிருந்தும் காப்பாற்ற இந்தக் கடவுள்களை நாடி வருகிறார்களே! அவர்களுக்கு நெருக்கடி வந்தால் கோயில் பணத்தைப் பயன்படுத்தக் கூடாதா?

கடவுள் சொத்தை மக்களுக்குப் பயன்படுத்தக் கூடாது என்றால், அந்தக் கடவுள் யாருக்கானவர்?

## இயக்கத்திற்கு வந்ததற்குப் பிறகு...



நீங்கள் இந்த இயக்கத்தில் உள்ளவரை உங்கள் சொந்த பகுத்தறிவை மட்டுமல்ல, உங்கள் மனசாட்சி என்பதைக்கூட நீங்கள் கொஞ்சம் மூட்டைக் கட்டி வைத்துவிட வேண்டியதுதான். கழகத்தில் சேரும் முன்பு நீங்கள் உங்கள் பகுத்தறிவைக் கொண்டு, கழகக் கோட்பாடுகளை எவ்வளவு வேண்டுமானாலும் ஆராய்ந்து பார்க்கலாம்; என்னுடன் வாதாடலாம். உங்கள் மனசாட்சி என்ன கூறுகிறது என்றும், என்னுடைய தன்மை எப்படிப்பட்டது என்றும் நீங்கள் எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் ஆற, அமர இருந்து யோசித்துப் பார்க்கலாம்!

ஆனால், எப்போது உங்கள் மனசாட்சியும் பகுத்தறிவும் இடங்கொடுத்து நீங்கள் கழகத்தில் அங்கத்தினர்களாகச் சேர்ந்துவிட்டீர்களோ அப்போதிலிருந்து உங்கள் பகுத்தறிவையும், மனசாட்சியையும் ஒரு புறத்தில் ஒதுக்கிவைத்துவிட்டு, கழகக் கோட்பாடுகளைக் கண் மூடிப் பின்பற்றி நடக்கவேண்டியதுதான் முறை.

**குடி அரசு – 29.05.1948**

# பேராசிரியர் கருணானந்தம் விளக்குகிறார் (2)

# ஆரியர்களை நியாயப்படுத்தும் வாதங்களுக்கு மறுப்பு

*ராகுல சாங்கிருத்தியாயன் எழுதிய 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற புதினம் ஆரியர்களை உயர்த்திப் பேசுகிறது. அதை வைத்து தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விளக்கம் தருகிறார் பேராசிரியர் கருணானந்தம். (சென்ற இதழ் தொடர்ச்சி)*

*1) ஆரியர்களிடையே ஏற்றத்தாழ்வுகள் இருந்ததில்லை. அடிமைத்தனத்தை வெறுத்ததுடன் அதை ஒழிக்க முயன்றனர். ஆனால் அசுரர்களிடையே (திராவிடர்கள்) தொழில் அடிப்படையில் பிரிவுகள், அடிமை வியாபாரம், வேசித்தொழில் அனைத்தும் இருந்தன. எனவே இந்த அடிமைத்தனத்திற்கு ஆரியரை குற்றம் சுமத்துவது சரியா ?*

ஆரியர்கள் குற்றமற்றவர்கள் என்ற பதிலை மட்டும் எதிர்பார்த்து இந்த கேள்வி கேட்கப் பட்டதாக புரிகிறது. இதை இரண்டாவது கேள்வியுடன் சேர்த்துப் பார்க்கின்றேன்.

*2) ஏற்றத்தாழ்வுகளை வெறுத்த ஆரியர்கள் அடிமை வியாபாரமும் வேசித் தொழிலும் செய்யும் அசுரர்களை தங்களுக்குக் கீழானவர்களாக நினைத்தது இயல்புதானே?*

இதில் ஒரு நியாயப்படுத்தலும் வருகிறது. அசுரர்கள் மீதான காழ்ப்புணர்ச்சிக்கும், ஒழிப்பு முயற்சிக்குமான நியாயம் இங்கே வந்துவிடுகிறது.

*3) அசுரர்களிடையே பல்வேறு தொழில் செய்யும் திறமைசாலிகள் இருந்தாலும், அவர்கள் போர் வீரர்களைவிட கீழானவர்களாக கருதப்பட்டதும், சிப்பாய்களும், விவசாயிகளும் பாதி அடிமைகளுமாக நடத்தப் பட்டதுமான அசுரர்களின் வாழ்வியல் முறையே அவர்கள் ஆரியர்களிடம் வீழக் காரணமாக இருந்தது. இந்த ஏற்றத்தாழ்வான சமூகம் ஆரியரல்லாத சமூகமாக இருந்தாலும் வீழத் தானே செய்யும்?*

முதலில் இந்த மூன்று கேள்விகளை எடுத்துக் கொள்வோம்.

இராகுல சாங்கிருத்தியாயன் எழுதிய 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலில் காணப்படுவது தேவ - அசுரப் போர் தான். அதில் அசுரர் கீழானவர்கள் என்றுதான் எழுதப்படுகிறது. முதலாவதாக இந்த நூலில், ஆரியர்களால் அல்லது பிராமணர்களால் படைக்கப்பட்ட நூல்களின் அடிப்படையிலேயே பல தகவல்களை இந்த நூலில் எழுதுகிறார். அசுரர்களின் பார்வையில் எந்த ஆதாரங்களை ஆய்ந்து பார்த்து இந்த முடிவுகளை தருகிறார்? 'ரிக் வேதகால ஆரியர்கள்' என்பது அவர் அந்த காலத்திலேயே எழுதிய நூல்தான். இதிலும் தேவ - அசுரப் போர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவர் கூறுகிற ஏற்றத்தாழ்வுகள் தொழில் ரீதியான பிரிவுகள், அடிமை வியாபாரம், வேசித் தொழில் இவையெல்லாம் அசுரர்களிடையே இருந்ததாக குறிப்பிடுகிறார். இதற்கு எங்கும் குறிப்புகளே கிடையாது. இராகுல சாங்கிருத்தியாயன் வரலாறு எழுதியபோது அதற்கான ஆதாரக் குறிப்புகளை கொடுக்கவில்லை. கதை எழுதும் போது சேர்த்துக் கொள்கிறார்.

அசுரர்களைப் பற்றி ஒரு சிறு குறிப்பை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆரியர்கள், சிந்துவெளி நாகரிகத்தின் போது போர் செய்து படிப்படியாக பஞ்சாப் அருகில் தங்களது ஆதிக்கங்களை ஏற்படுத்திக் கொண்டனர். சிந்துவெளியில் ஆரியர் படையெடுப்பை நாம் கவனிக்க வேண்டும். இது படையெடுப்போ, வருகையோ, அல்லது ஊடுருவலோ எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். சிந்துவெளி ஒரு நாகரிகம் என்பதை யாரும் மறுக்க முடியாது. சிந்துவெளி ஒரு நகர நாகரீகம். இதே சிந்துவெளியைப் பற்றி, ரிக் வேதகால ஆரியர்கள் நூலில், சிந்துவெளியின் தடயங்களை விளக்கிவிட்டு 'இது ஜனநாயக முதலாளித்துவம் கொண்ட ஒரு நாகரீக அமைப்பாக இருக்க வேண்டும்' என்று இராகுல சாங்கிருத்தியாயன் குறிப்பிடுகிறார். மன்னர்களின் கொடுங்கோல் ஆட்சி என்று குறிப்பிடவில்லை. ஜனநாயக முதலாளித்துவ நாகரிகம்னு குறிப்பிடுகிறார். சிந்து வெளியில் இருந்தவர்கள் செங்கற்களால் ஆன வீடுகளை அமைத்து, நகரங்களை அமைத்து, இன்னும் சொல்லப்போனால் ஒழுங்காக முறைப்படுத்தப் பட்ட தெருக்கள், கழிவு நீர் செல்வதற்கான சாக்கடைகளையும் கொண்ட ஒரு நகரத்தை



மேற்கு இந்தியாவில் பல இடங்களில் படைத்தவர்கள் சிந்துவெளி நாகரிகத்தினர். ஒரு நகர நாகரீகம் வர வேண்டும் என்றால்; அந்த நகர நாகரிகம் உருவாவதற்கு பல தொழில்கள் தேவைப் படுகின்றன. ஒரு நகர நாகரிகத்தில்தான் பல விதமான உலோகங்கள் பயன்படுத்தப் படும். தங்கம், வெள்ளி, இரும்பு, தாமிரம், செம்பு, ஈயம் போன்ற பல உலோகங்களை சிந்துவெளியினர் பயன்படுத்தினர். ஒரு உறுதியான குடியிருப்பை உருவாக்கியிருக்கிறார்கள். நாடோடி நாகரிகமாக இருப்பது நகர நாகரிகம் இல்லை. உறுதியான குடியிருப்பைக் கொண்டதே நகர நாகரிகம்.

ஏன் ஒரு நகரம் உருவாக்கப்படுகிறதென்றால் உற்பத்தியில் உபரி ஏற்படுகின்றபோது அந்த உற்பத்தி உபரியின் மூலமாக, உபரி வணிகப் பொருளாக மாற்றப்படுகின்றது. உற்பத்தியையும், வணிகத்தையும் சீரமைப்பதற்காக ஒரு அரசியல் அமைப்பு முறை அல்லது பாதுகாப்பு தேவைப்படுகின்றது. எனவே பொருளாதார நடவடிக்கைகளில், அறவியல் தொழில் நுட்பத்தில் முன்னேறிய சமூகம் மட்டும் தான் ஒரு நகர நாகரிகத்தை அமைக்க முடியும். சிந்து சமவெளி நாகரிகம் புதிய கற்காலத்தில் தொடங்கி, செம்பு காலத்தில் வளர்ந்து அது வெண்கல காலத்தில் முடிவடைகிறது. ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு மேலாக அந்த நாகரிகம் இருந்தது. ஒன்றிரண்டு அல்ல ஏறக்குறைய 500 நகரங்களின் தடயங்கள் கிடைத்துள்ளன. நகரகத்தில் தான் குயவர், நெசவாளர், கொல்லர், தச்சர் பொன்ற பல தொழில் பிரிவினர் ஒன்றுகூட முடியும். தொழில் பிரிவினர் ஒன்றாக இணைத்து தங்களது தொழில்களை செவ்வனே செய்ய முடியும். அங்கே அவர்களுக்குரிய பாதுகாப்பு இருக்கும். பண்டமாற்று செய்வதற்கான வகை இருக்கும். நாகரிகத்தின் வளர்ச்சியாக வருவது தான் பல்வேறு தொழில் பிரிவுகள். நாடோடிகளாக இருப்பவர்களுக்கு தொழில் பிரிவுகள் கிடையாது. ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டு புல்வெளிகளை தேடிச் செல்பவர்களுக்கு தொழில் பிரிவுகள் உருவாகாது.

> **ராகுல் சாங்கிருத்தியாயன் தனது 'வால்காவிலிருந்து கங்கை வரை' நூலில் ஆரியரை உயர்த்துகிறார் எப்படி?**
>
> - **ஆரியரிடையே ஏற்றத் தாழ்வு இல்லை. - இது உண்மையா?**
> - **திராவிடர்களான அசுரர்கள் அடிமை வியாபாரம், வேசித் தொழிலை செய்ததாலேயே அடிமையானார்கள் - இது சரியா?**
> - **அசுரர்கள் (திராவிடர்கள்) வாழ்க்கை முறையே ஆரியர்களிடம் அடிமைப்படுத்தியது என்ற வாதத்தில் நியாயம் உள்ளதா?**

தொழில் பிரிவுகளெல்லாம் இங்கே ஜாதிகளாக எப்படி திரிக்கப்படுகின்றன? உலகத்தில் உள்ள அனைத்து நாகரிகங்களிலும் தொழில் பிரிவுகள் உள்ளன. எகிப்து, சுமேரியா, பாரசீகம், கிரேக்கம், சீனா ஆகிய இடங்களிலும் தொழில் பிரிவுகள் இருந்தன. நாகரிகங்கள், நகரங்கள் இருக்கின்ற இடங்களில் கூட்டம் கூட்டமாக தொழிற் பிரிவுகள் உருவாகும். வசதிக்காக குழுக்களாக அமைந்து அவர்கள் உற்பத்திகளை செய்வார்கள், பண்டமாற்று முறை நடைபெறும், நாணயம் வரும் இவைகளுக்கெல்லாம் பாதுகாப்பை ஆட்சி முறை செய்து கொள்ளும். இவைதான் நாகரிகம் என்பது. இந்த நாகரிகங்கள் ஆரியர்களிடம் இல்லாமல் போனது ஏன் எதற்காக எப்படி? என்பதை வினா எழுப்பியவர் சற்று சிந்திக்க வேண்டும். தொழிற் பிரிவுகள் இருந்தன என்பது நாகரிகத்தின் அறிகுறி. ரிக் வேத கால ஆரியர்களிடம் தொழிற்பிரிவுகள் இல்லை என்றால் அவர்கள் நாகரிக வளர்ச்சி அடையவில்லை என்பதுதான் பொருள். சிந்துவெளி பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்லது திராவிடர்கள் நாகரிகத்தில் சிறந்தவர்கள். ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டு வந்தவர்கள் பின்பு படையெடுப்பாளர்களாக மாறிய ஆரியர்கள் நாகரிகத்திற்கு முந்தைய நிலையிலே இருந்தார்கள். தொழிற் பிரிவுகள் இருந்தன என்பது குறை அல்ல. ஒரு முற்போக்கான சமூகத்தின் வெளிப்பாடு அது. ஆனால் சிந்துவெளி நாகரிக தொழிற் பிரிவுகளை ஜாதிகள் என்று எந்த அடிப்படையில் கூறுகிறார்கள்?

சிந்துவெளியில், ஹரப்பா மொகஞ்சதாரோவில் பலவிதமான கட்டிடங்கள் இருந்தன. தானியக் கிடங்குகள், பல தூண்களை கொண்ட மண்டபங்கள், குளியல் குளங்கள் ஆகியவையோடு அடுக்கு வீடுகள் (Row houses) இருந்தன. ஒரு கட்டிடத்தில் பல பிரிவுகளை உருவாக்கி ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு குடியிருப்பாக இருந்தன. அந்த குடியிருப்புகளில் இரண்டு அறைகள் இருந்தன. பொதுக் குளியலறை, தனிக் குளியலறை என இரண்டும் இருந்தன. இந்த அடுக்கு வீடுகளை பார்த்த பார்ப்பன ஆய்வாளர்கள், 'இது தீண்டத்தகாத சேரிகள்' என்று கூறினார்கள். செங்கற்களால் ஆன கூரை வேய்ந்த வீடுகள்கூட தற்போதுள்ள தலித்களுக்கு கிடைப்பதில்லை. தொழிலாளர் குடியிருப்பில் குறைந்தபட்ச வசதிகளைக் கொண்டிருந்த சிந்துவெளி நாகரிகம், கூடாரங்களில் இருந்த ஆரியர்களை விட மேம்பட்டதா அல்லவா ? 'வால்காவிலிருந்து கங்கை வரை' நூலில் குறிப்பிட்ட காலத்தில், ஆரியர்கள் கூடாரங்களில் வசித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. கூடாரங்களில் வசித்தார்கள், ஆனால் நிலையாக வசிக்கவில்லை அந்த கலையும் தெரியவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே ஜாதி என்பது எங்கே வருகிறது? தொழிற் பிரிவுகளெல்லாம் ஜாதிகள் என்பதை நீங்கள் எப்படி நிறுவ முடியும் ?

எகிப்தில் தொழிற்பிரிவுகள் இருந்தன ஜாதிகள் இருந்ததா ? மெசபடோமியாவில் தொழிற்பிரிவுகள் இருந்தன; ஜாதிகள் இருந்ததா? இந்தியாவில் மட்டும் தொழிற் பிரிவுகள் இருந்தால் அது ஜாதியாகத்தான் இருக்கும் என்று எப்படி கூறுகிறீர்கள்? திராவிடர்களிடம் தொழிற்பிரிவுகள் இருந்தன. ஏனென்றால் மேம்பட்ட நாகரிகத்தையும், தொழில்நுட்பத்தையும் கொண்டவர்கள்.

ஜாதி என்பது எப்போது வரும்? செய்கின்ற தொழில் பிறப்பின் அடிப்படையில் வருகின்ற போதும், அந்த தொழிலை விட்டு வேறு தொழிலுக்கு செல்லாதவாறு சமூக, சமயத் தடைகள் இருக்கின்ற போதும், சமூக உறவுகளே தடைகளாக மாறுகின்ற போதும் ஜாதிகள் வருகின்றன. அப்படி இருந்ததற்கான ஒரு ஆதாரத்தையாவது இவர்கள் வைத்திருக்கின்றார்களா? எனவே ஜாதிகள் உருவானதை அசுரர்கள் மீது திணிப்பது விசமத் தனமான கருத்து. அசுரர்களின் இலக்கியங்கள், கல்வெட்டுகள், ரிக் வேத காலத்தில் அசுரர்களின் சமூக முறை இப்படி எதையும் குறிப்பிடாமலேயே அசுரர்கள் மீது பழியைப் போடுகிறார்கள். பெண்களை அடிமைகளைப் போல அடிமை வியாபாரம் செய்ததாகக் குறிப்பிடுகிறார்கள். பெரும்பாலான நாகரிகத்தில் அடிமை முறை இருந்துள்ளன. இன்னும் சொல்லப் போனால் ரோமானிய சாம்ராஜ்ஜியத்தின் பொருளாதாரமே அடிமை முறையினால் தான் இருந்தது. அமெரிக்காவிலும் கருப்பின மக்களை அடிமைப்படுத்திதான் இருந்தது. அதை உடைப்பதற்காகத்தான் இங்கிலாந்து 'அடிமை ஒழிப்புச் சட்டத்தைக்' கொண்டு வந்தது. உலகெங்கிலும் அடிமை ஒழிப்புப் பற்றி இயக்கம் தொடங்கப்பட்டது. அடிமை முறையே இல்லையென்று கூறவில்லை. ஆனால் உறுதி செய்வதற்கான ஆதாரங்கள் இல்லை. இருந்திருக்கலாம். ஆனால் ஆரியர்களிடத்தில் அடிமைத்தனம் இல்லை சுதந்திரத்தை விரும்பினார்கள் என்பது எப்படி சரியாகும்? நாடோடியாக சிறிய சிறிய குழுக்களாக சென்றவர்களிடத்தில் என்ன அடிமை முறை இருக்கும்? அடிமைத்தன்மை என்பது எங்கு வரும்? நிலையான சமூகக் கட்டமைப்பு, பொருளாதார கட்டமைப்பு இருக்கின்றபோது தான் அடிமைத்தனம் வரும். ஆடு, மாடு மேய்ப்பவனுக்கு இருக்கின்ற சொத்துக்களே ஆடு, மாடு தானே. அடிமை முறை அவனுக்கு தேவைப்படவில்லை. ஆனால் ஆரியர்கள் அடிமைத்தனத்தையே வெறுத்தார்கள் என்பது சரியானது அல்ல.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# 93ஆம் அகவையில் வாழும் திராவிட இயக்கப் பத்திரிகையாளரின் 71 ஆண்டு பயணம்



*93ஆம் அகவையில் வாழும் திராவிட இயக்க மூத்த பத்திரிகையாளர் கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன் எழுதிய கடிதம்.*

நான் பத்திரிகைப் பணியில் ஈடுபட்டு இவ்வாண்டு செப்டம்பர் 17ஆம் நாளுடன் 71 ஆண்டுகள் நிறை வுற்றன. தி.மு.க. தலைமைக் கழக ஏடுகளான ‘மாலைமணி’ (நாளிதழ்), ‘நம்நாடு’ (நாளிதழ்), ‘கழகக் குரல்’ (வாரஇதழ்), ‘நம்நாடு’ (வார இதழ்), ‘முரசொலி’ மற்றும் ‘விடுதலை’ உள்ளிட்ட பல்வேறு ஏடுகளிலும் பணியாற்றியுள்ளேன். சொந்தமாகவும் 32 ஆண்டுகள் இதழ் நடத்தியுள்ளேன். பதினைந்து நூல்கள் எழுதியுள்ளேன்.

எனது முதுமை காரணமாக இதழ்த் துறைப் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறேன். எனது ‘கவிக்கொண்டல்’ இதழ் கடந்த மார்ச்சுத் திங்களுடன் நிறுத்தப்பட்டுவிட்டது. எனது 71 ஆண்டுச் சாதனைகள் பின்வருமாறு:

1. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய முப்பெரும் தலைவர்களுடன் அணுக்கமாக இருந்து எழுத்துப் பணியாற்றும் அரிய வாய்ப்பினைப் பெற்றவன் நான். (இந்த அரிய வாய்ப்பைப் பெற்றவர் இப்போது வேறு எவரும் இலர்)
2. திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்ட 1949 செப்டம்பர் 17ஆம் நாளன்று, அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்ற 150 பேர்களில் நான் ஒருவன் மட்டுமே இப்பொழுது உள்ளேன். (எனக்கு வயது இப்போது 93)
3. திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டபோது, தொடங்கப்பட்ட ‘மாலை மணி’ நாளிதழில் பணியாற்றத் தொடங்கி, இன்று வரை திராவிட இயக்கப் பத்திரிகையாளனாகவே இருந்து வந்துள்ளேன்.
4. தமிழக வரலாற்றில் எழுபது ஆண்டுக்கு மேல் முழு நேரப் பத்திரி கையாளனாக இருந்து வந்திருப் பவனும் நான்தான். (இதற்கு முன் 70 ஆண்டுக் காலம் முழு நேரப் பத்திரிகையாளராக எவரும் இருந்ததாக வரலாறு இல்லை)
5. சென்னை நகரசபை என்று வழங்கி வந்த பெயரை விடுத்து, ‘சென்னை மாநகராட்சி’ என்ற பெயரை முதன்முதலாக ‘நம்நாடு’ நாளிதழ் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வந்தவன் நான்தான்.
6. ‘அபேட்சகர்’ என்று வழங்கி வந்த பெயரை விடுத்து, ‘வேட்பாளர்’ என்ற பெயரை ‘நம்நாடு’ மூலம் முதன்முதலில் நடைமுறைக்குக் கொண்டு வந்தவனும் நான் தான்.
7. நானும் சட்டமன்ற உறுப்பினராக இருந்த கிட்டப்பாவும் இணைந்து தொடர்ந்து செய்து வந்த பல்வேறு முயற்சிகளின் பலனாகத்தான் மாயூரம் மறைந்தது; மயிலாடுதுறை வந்தது.
8. நான் ஜெர்மனிக்குச் சென்றிருந்த போது அங்கு வாழும் தமிழர் களுக்குப் படிக்கத் தமிழ் நூல்கள் கிடைப்பதில்லை என்பதைக் கேட்டு, ஊர்த் திரும்பியதும் தமிழ் நாட்டிலிருந்து பத்தாயிரம் தமிழ் நூல்களைத் திரட்டி ஜெர்மனிக்கு அனுப்பி, அங்கு டோர்மண்ட் (Dortmund) என்னும் நகரில் தமிழ் நூலகம் ஏற்படுத்தச் செய்துள் ளேன். (இதற்கு முன் இப்படி தனிப்பட்ட ஒருவர், வெளிநாட் டுக்குப் பத்தாயிரம் நூல்கள் அனுப்பி வைத்ததாக வரலாறு இல்லை) திரு. பாக்கியநாதன் என்பவர் பொறுப்பில் அந்நூலகம் இயங்கி வருகிறது.
9. மரபுக் கவிதை வளர்ச்சிக்கென்று ‘கவிக்கொண்டல்’ என்னும் கவிதை இதழை இரண்டாண்டும், ‘மீண்டும் கவிக்கொண்டல்’ என்னும் இதழை 29 ஆண்டுகளும் தொடர்ந்து, தொய்வின்றி நடத்தியிருக்கின்றேன். இதற்கு முன்பு மயிலாடுதுறை யிலிருந்து ‘எழுச்சி’ என்னும் இதழையும் ஓராண்டு நடத்தியிருக்கிறேன்.
10. சென்னை மவுண்ட்ரோடு, அண்ணா சாலை என்று பெயர் மாற்றப்பட்டு ஓராண்டா கியும் மவுண்ட் ரோடு போஸ்ட் ஆபீஸ் என்ற பெயரை அஞ்சல் துறை மாற்றாமல் இருந்தனர். ‘கழகக் குரல்’ இதழில் அது பற்றிக் கண்டித்து எழுதினேன். அதன் பிறகுதான் அண்ணா சாலை, அஞ்சல் அலுவலகம் என்று பெயரை மாற்றினார்கள்.

(கவிக் கொண்டல் மா. செங்குட் டுவன் அவர்களது நேர்காணல் ‘நிமிர்வோம்’ 2017 டிசம்பர் இதழில் விரிவாக வெளி வந்திருக்கிறது - ஆர்)

# வேளாண் சட்டத்தை நீக்கக் கோரி மதுரையில் ஆர்ப்பாட்டம்




விவசாய மசோதாவை இரத்து செய்யக்கோரி புறநகர் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மதுரை மேலூரில் 18.12.2020 அன்று மாலை 5 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு திவிக மதுரை மாவட்ட செயலாளர் மா.பா. மணி அமுதன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் திலீபன் செந்தில், மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி முன்னிலை வகித்தனர்.

அண்ணா திராவிட மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொது செயலாளர் பசும் பொன் பாண்டியன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொது செயலாளர் வெ. கனியமுதன், தமிழ் தேச மக்கள் முன்னணியின் தலைவர் மீ.த. பாண்டியன், எஸ்.டி.பி.ஐ கட்சியின் புறநகர் மாவட்ட செயலாளர் ஜியாவுதீன், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தின் (ஹைதர் அலி) மாவட்ட துணைச் செயலாளர் -ஜாகீர் உசேன், தமிழக வாழ்வுரிமை பாதுகாப்பு மக்கள் கட்சியின் தலைவர் மணி பாபா, மேலூர் சிபிஐ தாலுகா செயலாளர் கண்ணன், எரிகாற்று குழாய் எதிர்ப்பு கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் செல்வராசன் மற்றும் மே 17 இயக்கம், தமிழக மக்கள் ஜனநாயக கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் புலிகள் கட்சி, குறிஞ்சியர் மக்கள் ஜனநாயக கட்சி உள்ளிட்ட அமைப்புகளின் மாவட்ட பொறுப்பாளர்கள் - மேலூர் பகுதி விவசாய சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட 200க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்திற்கு திருமங்கலம் பகுதிப் பொறுப்பாளர் மாளவிகா பவித்ரா நன்றி கூறினார்.

## சென்னை மாவட்டக் கழகக் கலந்துரையாடல்



திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்டக் கலந்துரையாடல், சென்னை தலைமை அலுவலகத்தில் 19.12.2020 அன்று மாலை 6:30 மணியளவில், தென் சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி தலைமையில் தொடங்கி நடை பெற்றது. கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

‘ஈரோட்டு பூகம்பம்’ முரசொலி முகிலன் படத்தை கழகப் பொதுச் செயலாளர் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து 2021 ஆண்டிற்கான நாட்காட்டி அறிமுகப்படுத்தப் பட்டது. மந்தைவெளி, மயிலாப்பூர் பகுதியிலிருந்து புதியதாக இணைந்த தோழர்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, கழக வெளியீடுகள் வழங்கப்பட்டன.

புரட்சிப் பெரியார் முழக்கம், நிமிர்வோம் சந்தா சேர்ப்பு, கழகத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கருத்துக்களைத் தெரிவித்தனர். தலைமைக்குழு உறுப்பினர்கள் அய்யனார், அன்பு தனசேகர், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

இறுதியாக, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், முரசொலி முகிலன் மற்றும் முரசொலி முகிலனைப் போல திராவிடர் இயக்கங்களில் தங்களை ‘மெழுகுவர்த்திகளாக்கி’ திராவிடர் இயக்கம், பெரியாரின் கொள்கைகளை கலை வடிவில் பரப்பிய தோழர்களைப் பற்றியும் நினைவலைகளை பகிர்ந்து கொண்டார்.

# திருப்பூர் கோவை மாணவர் கழகக் கூட்டத்தின் முடிவுகள்

தமிழ்நாடு மாணவர் கழகத்தின் திருப்பூர், கோவை பகுதி கலந்துரை யாடல், 20.12.2020 ஞாயிறன்று காலை 11 மணியளவில் திருப்பூர் மற்றும் கோவை மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழகத்தின் கலந்துரையாடல் கூட்டம் திருப்பூர் சிவகாமி இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கோவை மாவட்ட பொறுப்பாளர் விஷ்ணு தலைமை ஏற்று நடத்தினார். தொடர்ந்து தோழர்கள் தமிழ்நாடு மாணவர் கழகம் தற்போது வரை நடத்திய நிகழ்ச்சிகளின் செயல் பாடுகள் குறித்த நிறை, குறை மற்றும் இனி வரும் காலங் களில் எப்படி செயல்படுவது என்பது குறித்தும். இயக்கத்தை வலுப் படுத்துவது பற்றியும் அவரவர் கருத்துக்களை முன் வைத்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட தோழர்கள் கோவை மாவட்டம் விஷ்ணு, பார்த்தீபன், திருப்பூர் மாவட்டம் கனல்மதி, தேன்மொழி, பிரசாந்த், சந்தோஷ், ஈழமாறன், முத்தமிழ், பெரியார் பிஞ்சுகள் யாழினி, யாழிசை.

இறுதியில் கூட்டத்தின் நிறைவாக வரும் காலங்களில் தமிழ்நாடு மாணவர் கழகத்தின் செயல்பாடுகள் எப்படி அமைய வேண்டும் என்பதை தீர்மானங் களாக முடிவு செய்யப்பட்டது.

1. மாதம் ஒரு முறை திராவிட சித்தாந்த தலைவர்களின் பிறந்தநாள் மற்றும் நினைவுநாளையொட்டி இணையக் கருத்தரங்கம் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் நடத்தப்படும் என தீர்மானம் செய்யப்பட்டது.
2. திவிக சார்பில் நடத்தப்படும் மாவட்ட அளவிலான நிகழ்ச்சிகளில் அனைத்திலும் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்களின் பங்களிப்பை கட்டாயம் கொடுப்போம் என்று முடிவு எடுக்கப்பட்டது.
3. வரும் காலங்களில் கல்வி மற்றும் மாணவர்களின் நலன் சார்ந்த பிரச்சனைகள் ஏற்படும் போது தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் உரிய முறையில் துண்டறிக்கைப் பிரச்சாரமோ அல்லது தீர்வுகளை நோக்கிய ஆர்ப்பாட்டங்களோ முன்னெடுக்கப்படும் என்று தீர்மானம் செய்யப்பட்டது.
4. இட ஒதுக்கீடு குறித்து இளைஞர் களிடத்தில் சரியான புரிதல் இல்லாத நிலையில் அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வண்ணம் தொடர்ச்சியாக இணைய வழியிலோ அல்லது மாணவர்கள், பொது மக்கள் கூடும் இடங்களில் தெருமுனைப் பரப்புரைக் கூட்டங்கள் முன்னெடுப் போம் என்று தீர்மானிக்கப்பட்டது.
5. தமிழ்நாடு மாணவர் கழகத்தை வலுப்படுத்தும் வகையில் அந்தந்த பகுதியில் உள்ள படிப்பகங்கள் அல்லது நூலகத்தில் பள்ளி மாணவர் களை ஒருங்கிணைத்து புத்தக வாசிப்பு மற்றும் திராவிடக் கொள்கை சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்து வோம் என்று தீர்மானம் செய்யப் பட்டது.
6. வருடத்திற்கு இரண்டு முறை தமிழ்நாடு மாணவர் கழக மாவட்டப் பொறுப்பாளர்கள் நேரடியாக சந்தித்து பேசும் வகையில் கலந்துரை யாடல் கூட்டம் நடத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டது.

## முடிவெய்தினார்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி மாமியாரும், ஈரோடு இரத்தினசாமி துணைவியார் பிரேமா தாயாரும், திவிக சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் மேட்டூர் சூரிய குமார் பாட்டியுமான காளியம்மாள் (87) வயது மூப்பு காரணமாக 20.12.2020 ஞாயிறு காலை 6.00 மணிக்கு முடிவெய்தினார்.

காளியம்மாள் அவர்களின் உடல் தகனம் 20.12.2020 அன்று மதியம் 1.00 மணியளவில் கரூர் வாங்கல் சாலையில் உள்ள மின்மயானத்தில் நடைபெற்றது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

‘மறக்கப்பட்ட மாவீரர்களின் மறக்க முடியாத வரலாறு’ என்ற நூலில் பதிவு செய்துள்ளார். இந்த நூல் தான் பெரியார் இயக்கத்தில் கலை நிகழ்ச்சி நடத்தியவர்கள், பேச்சாளர்கள், போராளிகள் குறித்து ஓரளவு வெளிச்சம் பாய்ச்சுகிற நூல். தனக்குத் தெரிந்த தகவல்களை அவர் பதிவு செய்திருக் கிறார். என்.ஜி.ராஜன் புகைப்படம்கூட இப்போது கிடைக்கவில்லை.

இயக்கத்தின் கொள்கைகளுக்கு அடிக்கற் களாக இருந்து செயல்பட்ட பெரும் வசதி வாய்ப்புகள் இல்லாத ‘கொள்கைச் செல்வந்தர்களின்’ வரலாறுகளை நாம் இழந்து நிற்கிறோம். (தொடரும்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 24th December 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN